# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1808/13 - 2013 අප්‍රේල් 30 වැනි අඟහරුවාදා - 2013.04.30
*1808/13 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், மீகஹதென்ன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 109, மேலதிக இல. 28 இல், துண்டு இல. 2859 எனும் காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 2859**
காணியின் பெயர் : மெதவத்த ; விபரம் : மயானம் மற்றும் வீட்டுத் தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : எம். ஏ. டி. ஜொஸலின் குலரத்ன, மத்தேகம, மீகஹதென்ன ; விஸ்தீரணம் : 0.0234 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு வலல்லாவிட்ட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். எல். தசித நிரோசன,
பிரதேச செயலாளர்,
வலல்லாவிட்ட.

பிரதேச செயலகம்,
வலல்லாவிட்ட,
2013.04.12.

05 - 389